# Karur Aravakuruchi rescue

தினமணி
Follow Us
Thursday, October 10, 2013
11:03 AM IST

TEMPLE WAVES
BUY 3 BHK HOMES @ 36 LAKHS ALL INCLUSIVE IN CHROMPET, CHENNAI
ENQUIRE NOW

முகப்பு > திருச்சி > கரூர்

## மீட்பு பயிற்சி, தொழில்நுட்பம் அவசியம்

By அரவக்குறிச்சி
First Published : 29 April 2013 04:01 AM IST

ஆழ்துளை கிணற்றில் சிக்கிய குழந்தைகளை உயிருடன் மீட்க நவீன தொழில்நுட்பம் மற்றும் வழிமுறைகளை பயன்படுத்த வேண்டும் என்கிறார் கோவை கற்பகம் நிகர்நிலை பல்கலைக்கழக உதவிப் பேராசிரியர் கே.பி. ஸ்ரீதர்.

[illegible]

... 98422 91558.




Paragon Footwear




---

தினகரன் 29/4/2013

### அரவக்குறிச்சி அருகே ஆழ்துளையில் விழுந்து சிறுமி பலி

# தோட்ட உரிமையாளருக்கு போலீசார் வலைவீச்சு

கரூர், ஏப்.29: அரவக்குறிச்சி அருகே ஆழ்துளை கிணற்றில் விழுந்து இறந்த சிறுமியின் உடல் நேற்று சொந்த ஊரில் தகனம் செய்யப்பட்டது. இது தொடர்பாக தோட்டத்து உரிமையாளர் மீது வழக்குப்பதிந்து போலீசார் தேடி வருகின்றனர்.

திண்டுக்கல் மாவட்டம் வேடசந்தூர் அருகே உள்ள புத்தூரை சேர்ந்த முத்துப்பாண்டி மகன் பாண்டி என்ற சின்னபூசாரி (30). இவர் கரூர் மாவட்டம் அரவக்குறிச்சி அருகே இனுங்கனூர் சூரியாலி கிராமத்தை சேர்ந்த சக்திவேல் (57) என்பவரது தோட்டத்தை கடந்தாண்டு குத்தகைக்கு எடுத்து முருங்கை சாகுபடி செய்தார். அவர் குடும்பத்துடன் தோட்டத்திலேயே உள்ள குடிசையில் தங்கி இருந்தார்.

தோட்டத்து உரிமையாளர் சக்திவேல் கடந்த 25ம்தேதி தோட்டத்தில் 700 அடிக்கு ஆழ்துளை கிணறு அமைத்து அதில் தண்ணீர் வராததால் போர் மீது சாக்கை போட்டு வைத்திருந்தார். நேற்று முன்தினம் சின்னபூசாரி குடும்பத்தினருடன் முருங்கை காய்களை பறித்துக் கொண்டிருந்தார். அப்போது அருகில் விளையாடிய சின்னபூசாரியின் மூத்த மகள் முத்துலட்சுமி (7) ஆழ்துளை கிணற்றுக்குள் விழுந்து விட்டார். 12 அடி ஆழத்தில் சிக்கி இருந்த முத்துலட்சுமியை பக்கவாட்டில் சுரங்கம் தோண்டி, 15 மணி நேர போராட்டத்துக்கு பின் சடலமாக மீட்டனர்.

கரூர் அரசு மருத்துவமனையில் நேற்று காலை பிரேத பரிசோதனைக்கு பின் காலை 9.30 மணிக்கு முத்துலட்சுமியின் உடல் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. உயர் அதிகாரிகள் யாரும் வரவில்லை என்பதால் உடலை எப்படி எடுத்துச்செல்வது என தெரியாமல் பெற்றோர் மற்றும் உறவினர்கள் தவித்தனர்.

போலீசார் ஆம்புலன்சுக்கு ஏற்பாடு செய்தனர். பெற்றோர் மற்றும் உறவினர்கள் செல்வதற்கு வாகனம் எதுவும் ஏற்பாடு செய்யப்படாததால் அவர்களே கார் பிடித்து சொந்த ஊரான புத்தூருக்கு புறப்பட்டு சென்றனர். சொந்த ஊரில் சிறுமியின் உடல் தகனம் செய்யப்பட்டது.

ஆழ்துளை கிணற்றில் தண்ணீர் வராததால் பிவிசி பைப்களை அகற்றி வேறு இடத்தில் போர் போடுவதற்காக கொண்டு சென்று விட்டனர். இதனால் குழியை சுற்றி இருந்த மணல் சரிந்து விழுந்து சிறுமி இறந்து விட்டார். பிவிசி பைப்பை அகற்றாமல் இருந்தால் சிறுமி உள்ளே விழுந்திருக்க வாய்ப்பில்லை என அங்கிருந்தவர்கள் தெரிவித்தனர். அஜாக்ரதையாக இருந்ததாக நிலத்தின் உரிமையாளர் சக்திவேல் மீது 304(ஏ)வது பிரிவின் கீழ் அரவக்குறிச்சி இன்ஸ்பெக்டர் ஜெயராஜ் வழக்கு பதிவு செய்து தலைமறைவான அவரை தேடி வருகிறார்.





சிறுமியின் உயிரை பறித்த ஆழ்துளை கிணற்றின் குழி. அடுத்தபடம்: சடலமாக மீட்கப்பட்ட சிறுமி முத்துலட்சுமி.

**மீட்பு முயற்சி தோல்வி ஏன்?** கோவை கற்பகம் பல்கலைக்கழக உதவி பேராசிரியர் ஸ்ரீதர். எலக்ட்ரானிக்ஸ் கம்யூனிகேஷன் இன்ஜினியரிங் பிரிவில் பணியாற்றும் இவர் உள்ளிட்ட 4 பேர் அடங்கிய குழு ஆழ்துளையில் விழுபவர்களை மீட்பதற்கான கருவிகளை கண்டுபிடித்துள்ளனர். மீட்பு பணிக்காக ஒரு நவீன கருவி, கேமரா ஆகியவற்றுடன் அரவக்குறிச்சிக்கு வந்த ஸ்ரீதர் கூறியதாவது: நாங்கள் சென்று கேமராவில் பார்த்தபோது குழந்தையின் மீது ஒரு அடி அளவுக்கு மண் மூடியிருந்தது. கைவிரல்கள் மட்டும் தெரிந்தது.

ஆழ்குழாயில் அருகில் டிரில்லிங் செய்து தோண்டக் கூடாது. அந்த அதிர்வில் உள்ளே சிக்கி இருக்கும் குழந்தை மீது மண் [illegible] கந்தக பூமியாக இருக்கும்பட்சத்தில் அதனுடன் ஆக்சிஜன் கலக்கும்போது வெடி விளைவு ஏற்பட்டு [illegible] திணறல் ஏற்படக்கூடும். ஆழ்குழாயில் விழுந்தவர்களை மீட்பதற்கு 16 வகையான கருவிகளை வைத்திருக்கிறோம் என்றார்.

### சட்டம் என்ன சொல்கிறது?

கடந்த 2003ம் ஆண்டு அப்போதைய அதிமுக அரசு 'தமிழ்நாடு நிலத்தடி நீர் மேம்பாடு மற்றும் மேலாண்மை சட்டம் 2003'ஐ கொண்டு வந்தது. இதில், ஆழ்துளை கிணறு தோண்டுவதற்கு முன்பு, சம்பந்தப்பட்டவர்கள், அதற்கு உரிய அனுமதியை அரசிடம் பெற வேண்டும். இது பற்றி உள்ளாட்சி நிர்வாகத்திடம் குடிநீர் வழங்கல் துறை தகவல் தெரிவிக்கும்.

உள்ளாட்சித் துறை நிர்வாகத்தினர் மேற்பார்வையில் ஆழ்துளை கிணறு தோண்டும் பணி நடைபெறும். ஆழ்துளை கிணறு தோண்டும் பணி முடிந்துவிட்டதா அல்லது பாதியில் நிறுத்தப்பட்டதா, அப்படி என்றால் ஆழ்துளை கிணறு முழுமையாக மூடப்பட்டுள்ளதா என்பதை கண்காணித்து உறுதி செய்யும் பொறுப்பு பெருநகர குடிநீர் வழங்கல் துறை, மாநகராட்சி அல்லது மாவட்ட கலெக்டரைச் சேர்ந்தது.



29.04.2013 Karur Aravakuruchi rescue



THE NEW INDIAN EXPRESS

CITY EXPRESS

*Coimbatore, Monday, 6 May, 2013*

## CITY COLLEGE EXCELS IN INTL EXPO

A press release issued from Karpagam University said that a six-member researcher from the institution had participated in the fourth international engineering invention and innovation expo held at Malaysia recently. The expo witnessed a display of around 200 products from 27 countries across the world. The release said that the team from the institution displayed products such as 'child rescue system for bore well disaster', 'electromyography recognition system for human-robot interaction' and 'E-learning tool for children with autism disorders'. According to the release, the team bagged three medals – Korean Asia Invention Association Special Award, bronze medal and silver medal for all the three projects respectively.

**The research team of Karpagam University which participated in the international expo held at Malaysia recently pose for a photo**

International gold medal for the project borewell rescue device at university of malasiya perlis, malasiya

தி இந்து

தமிழகம்

Published: September 28, 2013 20:19 IST Updated: September 28, 2013 21:12 IST

திருவண்ணாமலை: ஆழ்துளை கிணற்றில் இருந்து மீட்கப்பட்ட சிறுமி உயிரிழப்பு



சிறுமி தேவியை மீட்கும் பணி

ஆரணி அருகே ஆழ்துளை கிணற்றில் விழுந்த சிறுமி, 10 மணி நேரப் போராட்டத்துக்குப் பின் மீட்கப்பட்டார். எனினும், அவர் சிகிச்சைப் பலனின்றி உயிரிழந்தார்.

திருவண்ணாமலை மாவட்டம் ஆரணி தாலுகாவில் உள்ளது புலவன்பாடி கிராமம். அந்த ஊரைச் சேர்ந்த பழனி - மலர் தம்பதியின் 3 வயது குழந்தை தேவி. பெரியவர்கள் வயலில் வேலை செய்துகொண்டிருந்தபோது, சிறுமி தேவி விளையாடிக் கொண்டிருந்தார். அப்போது, சங்கர் என்பவரது நிலத்தில் மூடப்படாமல் இருந்த 400 அடி ஆழ்துளை கிணற்றில் மீது போடப்பட்டிருந்த பிளாஸ்டிக் சாக்கு மீது கால்வைத்த தேவி உள்ளே விழுந்தார்.

அதிகாலை 7 மணியளவில் நடந்த இந்தச் சம்பவத்தைக் கண்ட உறவினர்கள் கூச்சலிட்டு, கிணற்றில் கயிறு போட்டு மீட்க முயற்சி செய்தனர். அவர்களால் எதுவும் முடியாத நிலையில், உடனடியாக காவல்துறை மற்றும் தீயணைப்பு துறைக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. மீட்புக்குழுவுடன் மருத்துவ குழுவும் வந்தது. 108 ஆம்புலன்ஸ் தயார் நிலையில் வைக்கப்பட்டது.

உடனடியாக மீட்புப் பணிகள் தொடங்கின. சிறுமிக்கு மூச்சு திணறல் ஏற்படாமல் இருக்க ஆக்சிஜன் செலுத்தப்பட்டது. 3 பொக்லைன் இயந்திரங்கள் மற்றும் 1 ஹிட்டாச்சி இயந்திரம் வரவழைக்கப்பட்டு ஆழ்த்துளை கிணறு அருகே பள்ளம் தோண்டும் பணி நடந்தது. ஆழ்துளை கிணறு இருக்கும் பகுதிக்கு அடியில் பாறைகள் உள்ளதால், பள்ளம் தோண்டும் பணி மெதுவாக நடந்தது. மாலை 4 மணி வரை சிறுமியின் குரல் கேட்டது.

இதற்கிடையே, கோயமுத்தூர் மேட்டுப்பாளையம் கற்பகம் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த உதவிப் பேராசிரியர் கே.பி.ஸ்ரீதர் தலைமையிலான குழுவினர் மாலை 5.30 மணிக்கு சம்பவ இடத்தை வந்தடைந்தனர். மாலை 6 மணிக்கு, மீட்புப் பணியைத் தொடங்கிய அக்குழுவினர், போர்வெல் மீட்புக்கருவி தொழில்நுட்பத்தை பயன்படுத்தி, 15 நிமிடங்களில் சிறுமியை ஆழ்துளை கிணற்றில் இருந்து மீட்டனர்.

சுமார் 10 மணி நேரப் போராட்டத்துக்குப் பின், ஆழ்துளை கிணற்றில் இருந்து சிறுமி தேவி மீட்கப்பட்டார். மயக்க நிலையில் இருந்த அவர், ஆம்புலன்ஸ் மூலம் உடனடியாக மருத்துவமனைக்குக் கொண்டுசெல்லப்பட்டார்.





ஆழ்துளையில் இருந்து மீட்கப்பட்ட சிறுமி தேவிக்கு வேலூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டது. ஆனால், சிகிச்சைப் பலனின்றி அவர் உயிழந்தார். இதை மருத்துவர்கள் உறுதி செய்தனர்.

சிறுமி தேவியின் உடல் உறுப்புகள் செயலிழந்ததால், சிகிச்சைப் பலனளிக்கவில்லை என்றும், நீண்ட நேரம் குழியில் இருந்ததால், தேவையான ஆக்சிஜன் கிடைக்கவில்லை என்றும் வேலூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையின் முதல்வர் சிவக்குமார் தெரிவித்தார்.

சிறுமி தேவியின் இழப்பு, அவரது பெற்றோர், உறவினர் மட்டுமின்றி திருவண்ணாமலையை சோகத்தில் ஆழ்த்தியுள்ளது.

இதனிடையே, இந்த விபத்து குறித்த தகவல் அறிந்ததும் தலைமறைவான ஆழ்துளை கிணறு தோண்டப்பட்ட நிலத்தின் உரிமையாளர் சங்கரை போலீஸார் கைது செய்தனர்.

Keywords: ஆழ்துளை கிணறு, ஆழ்துளை விபத்து, திருவண்ணாமலை, ஆரணி
Topics:
தமிழகம், திருவண்ணாமலை



28.09.2013 rescue operation heald at Thiruvannamalai District , we have rescued the infant in 15 minutes.








Korian special award for the project rescue tools at malasia 2013




30.10.2013 Demonstration and training for Tamilnadu Fire and Rescue Department Government of Tamilnadu at Coimbatote District Headquaters in the presence of Joint Director Fire and rescue Mr Shakulhanmmed